## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



செங்குன்றம் பேரூர்,
சென்னை வடகிழக்கு மாவட்டம்.



பெரணமல்லூர் மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



செங்கம் மத்திய ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



மண்ணச்சநல்லூர் மத்திய ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்



உடையார்பாளையம் பேரூர்,
அரியலூர் மாவட்டம்.



ஒட்டன்சத்திரம் நகரம்,
திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.



கருமத்தம்பட்டி நகரம்,
கோவை தெற்கு மாவட்டம்.



அந்தியூர் பேரூர்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



மேலச்செவல் பேரூர்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்



குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம்.
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்.



கிள்ளியூர் தெற்கு ஒன்றியம்,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.



முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு மாநில வாணிபக் கழக பணியாளர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக அலுவலக கூட்டரங்கில் கோவை டாஸ்மாக் தொ.மு.ச. தலைவர் கே.ராக்கிமுத்து தலைமையில் மாநில டாஸ்மாக் தொ.மு.ச. துணைத் தலைவர் ஆ.சுப்பிரமணியன், டாஸ்மாக் தொ.மு.ச. மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கிருஷ்ணகாந்த், பொருளாளர் ந.கண்ணன், பொள்ளாச்சி டாஸ்மாக் தொ.மு.ச. நகர செயலாளர் ஆ.சிவானந்தம், நகர தலைவர் பி.திருமுருகன், மாவட்ட துணை செயலாளர் கே.வி.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் பொள்ளாச்சி டாஸ்மாக் தொ.மு.ச. அமைப்பு செயலாளர் மா.கார்த்திகேயன் வரவேற்புரையில் நடைபெற்ற விழாவில் கோவை மாவட்டத்தில் 2024 2025 ஆம் கல்வி ஆண்டில் 10ம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற டாஸ்மாக் பணியாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத் தொகையினை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் வழங்கினர். இதில் கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் LPF நா.தமிழ்ச்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், சிவானந்தா காலனி பகுதி பொறுப்பாளர் டெம்போ சிவா, lpf பெரியசாமி, நாசர், வழக்கறிஞர் வினோத்குமார், கோபால், ஆட்டோ சங்கம் lpf ப.வணங்காமுடி, ஆர்.எஸ்.புரம் பூபாலன், கட்டிட தொமுச கிருஷ்ணசாமி, ஆவின் ஆனந்த், அருண்குமார், பன்னீர் செல்வம், வெள்ளி குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மற்றும் இளம் தொழில் முனைவோர் அமைப்பு இணைந்து பொள்ளாச்சியில் நடத்திய, SHOPPING EXPO 2025 நிகழ்வை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, பொதுச் செயலாளர் வி.இ.கோவிந்தராஜுலு உள்பட கழக நிர்வாகிகள், வணிக பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், வெள்ளக்கோவில் ஒன்றிய, நகர கழக அலுவலகத்தில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் ராசி கே.ஆர். முத்துக்குமார், கே.சந்திரசேகரன், சபரி எஸ்.முருகானந்தம், எம்.எஸ்.மோகனசெல்வம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.